**சார்பு நீதிமன்றம், பெருந்துறை**
MCOP No: 05/2025

2026-ம் ஆண்டு ஜூலை மாதம் 10 ம் நாள் Pw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | தனலட்சுமி |
| த.க.பெயர் | சோமசுந்தரம் |
| கிராமம் | செங்குளம் |
| மாவட்டம் | |
| வயது | 60 |

**ம.சா. 1 நாள் 10.07.2026**

**முதல் விசாரணை: (சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை செய்யப்படுகிறார்)**

நான் இம்மனுவின் 2 ம் மனுதாரர். 1 ம் மனுதாரர் எனது கணவர். 3 ம் மனுதாரர் எனது மகள். விபத்தில் என் மகன் வினோத்குமார் இறந்ததற்கான இழப்பீடு கோரி மனு தாக்கல்செய்துள்ளோம். மனுதாரர்கள் சார்பாக என் தரப்பு முதல் விசாரணைக்காக நிருபண ஆணையுறுதி வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தெரியும்.

| | | |
|---|---|---|
| 1. | முதல் தகவல் அறிக்கை | ம.சா.ஆ.1 |
| 2. | மாதிரி வரைபடம் | ம.சா.ஆ.2 |
| 3. | பார்வை மகசர் | ம.சா.ஆ.3 |
| 4. | மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை (இரு சக்கர வாகனம்) | ம.சா.ஆ.4 |
| 5. | மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை (லாரி) | ம.சா.ஆ.5 |
| 6. | பிரேத பரிசோதணை அறிக்கை | ம.சா.ஆ.6 |
| 7. | இறுதியறிக்கை | ம.சா.ஆ.7 |
| 8. | வினோத் குமாரின் ஆதார் அட்டை | ம.சா.ஆ.8 |
| 9. | வினோத் குமாரின் வருமான வரி அடையாள அட்டை | ம.சா.ஆ.9 |
| 10. | வினோத் குமாரின் ஓட்டுநர் உரிமம் | மசாஆ 10 |

| | | |
|---|---|---|
| 11 | வினோத் குமார் மரவங்காடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கதில் செயலாளராக நியமிக்கப்பட்டதற்கான தீர்மானம் | மசாஆ 11 |
| 12 | மேற்படி சங்கத்தில் வினோத் குமாருக்கு வழங்கப்பட்ட ஊதிய படிவத்தின் நகல் | மசாஆ 12 |
| 13 | வினோத் குமாரின் இறப்பு சான்று | மசாஆ 13 |
| 14 | வினோத் குமாரின் வாரிசு சான்று | மசாஆ 14 |
| 15 | வினோத் குமாரின் வங்கி கணக்குப் பட்டியல் | மசாஆ 15 முதல் 21 |
| 16 | வினோத் குமாரின் வருமான வரி தாக்கல் செய்ததற்கான ஒப்புகை | மசாஆ 22 முதல் 29 |
| 17 | மருத்துவ விடுவிப்பு சான்று | மசாஆ 30 |
| 18 | மருத்துவமனை சிகிச்சை விவரம் | மசாஆ 31 |
| 19 | வினோத்குமாரின் வங்கி கணக்குப் பட்டியல் | மசாஆ 32 |
| 20 | 1 ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் | மசாஆ 33 |
| 21 | 1 ம் எதிர்மனுதாரரின் பதிவு சான்று | மசாஆ 34 |
| 22 | காப்பீட்டு சான்று | மசாஆ 35 |
| 23 | 1 ம் மனுதாரரின் ஆதார் அட்டை | மசாஆ 36 |
| 24 | 2 ம் மனுதாரரின் ஆதார் அட்டை | மசாஆ 37 |
| 25 | 3 ம் மனுதாரரின் ஆதார் அட்டை | மசாஆ 38 |
| 26 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | மசாஆ 39 |

மனுவில் கோரியுள்ள பரிகாரம் வழங்கக் கோருகிறேன்.

குறுக்கு விசாரணை ( 1 ம் எதிர்மனுதாரர் தரப்பில்)

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. விபத்து குறித்து சண்முகசுந்தரம் என்பவர் தகவல் சொல்லி தெரிந்து கொண்டேன். விபத்து இரவு 11 மணியளவில் ஏற்பட்டது. 1 ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதாக நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரம் தவறானது என்றால சரியல்ல. விபத்து சமயத்தில் 1 ம் எதிர்மனுதாரருக்கு உரிய ஓட்டுநர் உரிமம் இருந்தது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. விபத்து சமயத்தில் என் மகன் தலைக் கவசம் அணிந்திருந்தார். அவ்வாறு தலைக் கவசம் அணிந்திருந்தால் தலையில் காயம் ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. அவர் தலைக் கவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. 1 ம் எதிர்மனுதாரர் அவரின் வாகனத்தை 2 ம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்துள்ளதால் 2 ம் எதிர்மனுதாரர் தான்இழப்பீடு செலுத்த வேண்டும் என்றால் இருவரும் செலுத்த வேண்டும். என் மகன் பல்வேறு தொழில் செய்து

மாதம் ரூ லட்சத்திற்கு குறைவில்லாமல் வருமானம ஈட்டியதாக நான் மனுவிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் எங்களுக்கு இழப்பீடு செலுத்த பொறுப்பல்ல என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை ( 2ம் எதிர்மனுதாரர் தரப்பில்)**

விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் ஓட்டி வந்த வாகன்திற்கு தகுதி சான்று இல்லை என்றும் காப்பீட்டு விதி மீறல் என்பதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு செலுத்த பொறுப்பல்ல என்றால் சரியல்ல. விபத்தினபோது என் மகனுக்கு திருமணம் ஆகவில்லை. என் மகளுக்கு என் மகன் இறப்பதற்கு முன்பே திருமணம் ஆகிவிட்டது. என் மகள் திருமணம் முடித்து அவரின் கணவர் வீட்டில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். என் கணவர் விவசாயம் செய்து வருகிறார். வேறு வேலை எதுவும் செய்வதில்லை. எஸ் எஸ் வி ஏஜென்சிஸ் தொடர்பான வங்கி கணக்குப் பட்டியல் தாக்கல் செய்துள்ளேன் அந்த எஸ் எஸ் வி ஏஜென்சிஸ்யாருக்கு உரிமையுடையது என்பது தொடர்பான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எஸ் எஸ் வி ஏஜென்சிஸ் கணக்குப் பட்டியலில் யாருடைய பெயரும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ஈக்விடாஸ் வங்கி கணக்குப் பட்டியலில் இரண்டு நபர்களுக்கு தொடர்புடைய கூட்டுக் கணக்கு என்றால் சரிதான். அது என் கணவருக்கும் என் மகனுக்கும் சொந்தமான கூட்டுக் கணக்கு என்றால் சரியல்ல. என் மகன் கூட்டுறவு பால் சொசைட்டியில் இருந்து ரூ.6000 சம்பளம் பெற்று வந்தார் என்பதற்கு எனது மகனின் கணக்குகள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் மகன் செய்து வந்த வேலைகளை என் கணவர் தொடர்ந்து செய்து வருகிறார் என்றும் அதனால் அந்த தொழில் மூலம எங்களுக்கு வருமான இழப்பு எதுவும் இல்லை என்றால சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள கணக்குப் பட்டியல் மற்றும் வருமான வரி கணக்குகள் அடிப்படையில் என் மகனின் வருமானத்தை நிர்ணயம் செய்ய முடியாது என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ள தொழில்கள் அனைத்தும் இழப்பீடு பெற வேண்டி மிகைப்படுத்தி கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்திற்கு என் மகனின் கவனக்குறைவும் அஜாக்கிரதையும் தலைக் கவசம் அணியாமல் வாகனத்தை லாரி மீது மோதி விபத்தை வரவழைத்துக் கொண்டார்

என்றால் சரியல்ல. தலைக் கவசம் அணிந்திருந்தால் தலையில் ஏற்பட்ட காயங்களை தவிர்த்திருக்கலாம் என்றால் சரியல்ல. 1 ம் எதிர்மனுதாரர் தகுதி சான்று இல்லாமல் வாகனத்தை ஓட்டி சென்றதால் 2 ம் எதிர்மனுதாரர் இழப்பீடு செலுத்த பொறுப்பல்ல என்றால் சரியல்ல. நாங்கள் கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED

Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2026.07.10 16:07:07 +0530

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS